<u>குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்</u>
முன்னிலை: திருமதி.S.சர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**விரைவு நீதிமன்றம் (மு**.கூ.பொ.)
ஓமலூர்.
எஸ்.டி.சி. 18/2022

2024 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 05 ஆம் தேதி புதன் கிழமை புகார்தாரரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. ஆர்.சதீஸ்குமார், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சதாசிவம் | வயது | : |
| த/பெ | : பெருமாள் | தொழில் | : |
| ஊர் | : | | |
| வட்டம் | : ஓமலூர் | ஜாதி | : |
| மாவட்டம் | : சேலம் | தேதி | : 05.06.2024 |

விசாரணை தொடங்கிய நேரம் – மதியம் 01.14 மணி.
Complainant Sadhasivam present. Accused Venkatramani present. Advocate Mr.G.Karunakaran present for Complainant. Advocate Mr. G.Ranganathan Present for Accused.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. அ.சா.1 காசோலை V.R.Constructions Proprietor என்ற பெயரில் கையெழுத்திடப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் தான் காசோலையை கொடுத்தார். எதிரி மீது தாக்கல் செய்துள்ள புகாரை எதிரியை தனிநபராகவும் எதிரி நடத்தி வரும் நிறுவனத்தை தனியாகவும் காண்பித்து வழக்கு தொடுத்திருக்க வேண்டும் என்றாலும் அவ்வாறு இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் எதிரி தான் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் என்பதால் எதிரி மீது வழக்கு தொடுத்துள்ளேன்.

2. வழக்கு காசோலையின் அடிப்படையில் எதிரிக்கு எதிராக உரிமையியல் வழக்கு தான் தாக்கல் செய்ய முடியும் என்றாலும் குற்ற வழக்கு தாக்கல் முடியாது என்றாலும் சரியல்ல. நான் இரண்டு வங்கி கணக்குகள் வைத்துள்ளேன். எனக்கு ஓமலூர் இந்தியன் வங்கியிலும், ஓமலூர் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா என்ற வங்கியிலும் கணக்கு உள்ளது. நான் எனது வரவு செலவுகளை பொதுவாக மேற்படி இரண்டு வங்கி கணக்கு மூலமாக செய்து வருகிறேன் என்றால் சரி. எதிரி ஸ்டேட்

பேங்க் ஆப் இந்தியா காசோலை கொடுத்தால் நான் கணக்கு வைத்திருக்கு ஓமலூர் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி கணக்கில் வசூலுக்காக செலுத்தினேன்.

3. நான் வருமான வரி செலுத்துபவர் அல்ல என்றால் சரி. நான் எனது இரு வங்கி கணக்குகளின் பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரி. நான் எனது வங்கி கணக்குகள் மூலம் அதிகபட்சமாக ரூ.5,00,000/– ம் வரை பரிவர்த்தனை செய்துள்ளேன். நான் எனது வங்கி கணக்கில் அதிபட்சம் எவ்வளவு தொகை வைத்திருந்தேன் என்றால் வங்கி கணக்கு பட்டியலை பார்த்தால் தெரியும். நான் எனது பிரமாண வாக்குமூலத்திலும் மனுவிலும் என்ன வேலை செய்து வருகிறேன் என்ற குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. எதிரிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எதிரி மறுத்துவிட்டதாக எனது மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை வாங்க மறுத்துவிட்டதாக 05.02.2022 ம் தேதி மேற்படி அறிவிப்பு திருப்பப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கு மனுவை 05.02.2022 ம் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் இந்த மனு 14.03.2022 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால் கால தாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு என்றால் சரியல்ல.

5. எதிரி கடன் வாங்கிய தேதியான 23.11.2021 ம் தேதி அன்றே 23.12.2021 என்று பின் தேதியிட்டு காசோலை கொடுத்ததாக நான் கூறியுள்ள நிலையில் 24.12.2021 ம் தேதி என்னிடம் காசோலை இருந்த போதிலும் எதிரியிடம் நேராக சென்று கடனை திருப்பி தருமாறு எதிரியிடம் சென்று கேட்டதற்கான காரணம் என்னவென்றால் எதிரி ஒரு மாதத்திற்குள் பணத்தை திருப்பி செலுத்திவிடுவதாக கூறியதால் ஒரு மாதம் கழித்து கேட்டேன்.

6. எனக்கு 60 சென்ட் விவசாய நிலம் உள்ளது என்றால் சரி. மேற்படி 60 சென்ட் நிலம் கூட்டுகுடும்ப சொத்து என்றாலும் அதில் ஈட்டும் வருமானம் பங்குதாரர்களுக்கு உரியது என்றாலும். மேற்படி நிலத்திலிருந்து நான் ஈட்டும் வருமானம் எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு போதுமானது அல்ல என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு கடன் கொடுத்த சமயத்தில் நிதி நிறுவனமும் காபிபாரும் நடத்தி வந்தேன். எதிரிக்கு என்னிடம் கடன் வாங்கி தனது வியாபாரத்தை நடத்த பேண்டிய தேவை இல்லை என்றால்

சரியல்ல.

7. எதிரி தனது அலுவலகத்தில் வைத்திருந்த காசோலை காணாமல் போனதால் அவரது வங்கிக்கு காசோலை கட்டணத்தை நிறுத்தி வைக்க சொல்லி மனு அனுப்பி உள்ளார் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி வாங்க மறுத்துவிட்டதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எதிரி நான் நடத்தி வரும் சாமி காப்பி பாருக்கு வருவதன் மூலம் எனக்கு அறிமுகமானார். எனது காபிபாருக்கு வருவதனால் அறிமுகமானதை வைத்து எதிரிக்கு நான் கடன் கொடுத்தேனா என்றால் எதிரி எனது நண்பர் மற்றும் உறவினர் ஆவார். எதிரியின் காரை நான் பயன்படுத்தி வந்ததால் எதிரிக்கும் எனக்கும் முன்விரோதம் இருக்கும் என்றால் சரியல்ல. எதிரி மீது பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.